**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8064810

1. District மாவட்டம் Tirunelveli | PS காவல் நிலையம் Vigilance and Anti Corruption | Year ஆண்டு 2020 | FIR No முதஅ எண் 04/2020 | Date நாள் 14.08.2020

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள் 7 (a)
(ii) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 | Sections பிரிவுகள்
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 06.08.2020 | Date to : நாள் வரை
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 16.00 hrs | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 14.08.2020 | Time : நேரம் 08.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Sub Registrar Office, Kadayanallur 65 Km North West
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P.ANNAMURUGAN | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.POOLIAPPAN
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 19.05.1980 | (d) Nationality : நாட்டினம் INDIAN | (e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Private Job | (g) Address : முகவரி 2/85, CHAIRMAN STREET, THIRIKOODAPURAM, CHOKKAMPATTI KADAYANALLUR TALUK, TENKASI DISTRICT

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tmt.Kasthuri, Sub Registrar, Kadayanallur Sub Registry Office, Kadayanallur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 14.08.2020-ம் தேதி காலை 08.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரு.P.அன்னமுருகன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட கடையநல்லூர் சார்பதிவக சார் பதிவாளர் திருமதி.கஸ்தூரி என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 14.08.2020-ம் தேதி காலை 09.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2020 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புனர் P.அன்னமுருகன், வயது 40/2020, த/பெ.பூலியப்பன், 2/85 சேர்மன் தெரு, திரிகூடபுரம், சொக்கம்பட்டி, கடையநல்லூர் தாலுகா, தென்காசி மாவட்டம். பெறுனர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருநெல்வேலி. அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கங்கைகொண்டானில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். எங்கள் பாட்டி திருமதி.அண்ணாமலையாத்தாள் பெயரில்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………… Rank …………………… to take up the Investigation / Refused investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14/08/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ஜா. கவிதாலட்சுமி
Rank: நிலை காவல் ஆய்வாளர்

கடையநல்லூர் தாலுகா சொக்கம்பட்டி கிராமத்தில் உள்ள 5.1 ஏக்கர் நிலத்தையும், வைரவன்குளம் கிராமம் நாணத்தட்டான் ஓடை புரவில் உள்ள 5.23 ஏக்கர் விவசாய நிலத்தையும் எனது அப்பா திரு.பூலியப்பன் மற்றும் எனது அம்மா திருமதி.மாரியம்மாளுக்கு அவரது காலத்திற்கு பின்பு அனுபவித்துக்கொள்ள உயில் எழுதி செங்கோட்டை சார்பதிவக ஆவண எண் 10/1993ன் படி பதிவு செய்து கொடுத்துள்ளார். எனது பாட்டி திருமதி.அண்ணாமலையாத்தாளும், எனது அப்பா திரு.பூலியப்பனும் இறந்துவிட்டார்கள். மேற்படி பூர்வீக நிலத்தை நானும், எனது அம்மா திருமதி.பூ.மாரியம்மாள், அண்ணன் திரு.பூ.சுரேசஷ் பாபு மற்றும் தங்கை திருமதி.பூல் துரைச்சி ஆகிய எங்களுக்குள் பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளோம். அந்த பாகப்பிரிவினையை பதிவு செய்ய வேண்டி ஆவணங்கள் தயார் செய்து கடையநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று சார்பதிவாளர் திருமதி.கஸ்தூரி அவர்களை கடந்த 02.07.2020ம் தேதி சந்தித்தேன். அவர் ஆவணங்களில் சில குறைபாடு உள்ளது அதனால் ஓய்வு பெற்ற சார்பதிவாளர் திரு.வைரமுத்து அவர்களை பார்த்து ஆவணங்களை தயார் செய்யும்படி சொன்னார். அதன்படி நானும் தென்காசியில் உள்ள ஓய்வு பெற்ற சார்பதிவாளர் திரு.வைரமுத்து அவர்களை சந்தித்து எங்களது பூர்வீக சொத்து சம்மந்தமான ஆவணங்களை கொடுத்தேன். எங்களது ஆவணங்களை பார்வையிட்டு சில ஆவணங்கள் வாங்கி கொடுக்க சொன்னதன்பேரில் அதனையும் வாங்கி கொடுத்தேன். அதன்பின் சில நாட்கள் கழித்து திரு.வைரமுத்து அவர்கள் என்னிடம் பாகப்பிரிவினைக்கு பாக விடுதலை பத்திரம்தான் பதிவு செய்யமுடியும் என்று சொன்னார். நானும் சரி என்று சொல்லிவிட்டேன். அதன் பின்பு கடந்த 06.08.2020ம் தேதி திரு.வைரமுத்து அவர்கள் என்னை சார் பதிவாளர் திருமதி.கஸ்தூரி அவர்களை பார்க்க அழைத்து சென்றதன்பேரில் அவருடன் சென்று அன்றைய தினம் மாலை சுமார் 04.00 மணியளவில் கடையநல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து சார் பதிவாளரை சந்தித்தோம். அப்போது அவர் ஆவணங்களை பார்வையிட்ட பின்பு வருகிற 10.08.2020ம் தேதி ஆவணம் பதிவு செய்ய சொன்னார். பின்பு திரு.வைரமுத்து தனியாக சென்ற பின்பு சார் பதிவாளர் திருமதி.கஸ்தூரி அவர்கள் என்னிடம் அன்றைய தினம் ஆவணம் பதிவு செய்ய வரும்போது முத்திரை தாள் கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் செலுத்தியது போக ரூ.1,50,000/- தனக்கு தர வேண்டும் என்று சொன்னார். நான் எதற்கு என்று கேட்டேன். அதற்கு அவர் ஆவணங்கள்

சரியாகத்தான் உள்ளது, ஆனால் உங்கள் இடம் தொடர்பாக சிலர் ஆட்சேபனை மனு கொடுத்துள்ளனர். ஆனால் அவர்கள் நீதிமன்றத்தில் தடையாணை ஏதும் பெறவில்லை. அவர்களுக்கு நான் ரசீதும் போட்டு கொடுக்கவில்லை அதையெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். உங்களிடம் பட்டாவும், அசல் பத்திரங்களும் உள்ளது. அதனால் உங்களுக்கு பாக விடுதலை பத்திரம் பதிவு செய்து கொடுக்கிறேன் என்று சொன்னார். நான் பதில் ஏதும் சொல்லாமல் வந்துவிட்டேன். பின்பு திரு.வைரமுத்து அவர்கள் எனது பெயரிலும், எனது அம்மா, அண்ணன் மற்றும் தங்கை பெயரிலும் தனித்தனியாக நான்கு பாக விடுதலை பத்திரங்களை தயார் செய்து 10.08.2020ம் தேதி என்னிடம் கொடுத்தார். மேலும் அவர் அன்று பகல் 12.00 - 13.00 மணிக்குள் பதிவு செய்ய டோக்கன் போடப்பட்டுள்ளது என்றும், பாக விடுதலை பத்திரம் தயார் செய்ய முத்திரை தாள் ரூ.72,100/- வாங்கியதற்கும் மற்றும் பதிவு கட்டணம் ரூ.25,955/- செலுத்தியதற்கும், பத்திர எழுத்தர் மற்றும் அவருக்குரிய எல்லா கட்டணத்தையும் என்னிடமிருந்து வாங்கிக்கொண்டார். திரு.வைரமுத்து அவர்கள் என்னிடம் சார் பதிவாளர் திருமதி.கஸ்தூரி அவர்களுக்கு ரூ.1,50,000/- கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நாங்கள் நான்கு பேரும் கடையநல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு மேற்படி பாக விடுதலை பத்திரங்களுடன் பதிய சென்றோம். அப்போது சார்பதிவாளர் திருமதி.கஸ்தூரி அவர்கள் எங்களுடைய ஆவணங்களை பார்வையிட்டுவிட்டு பத்திரம் தயார் செய்தவர் பெயர் குறிப்பிடப்படாததாலும், எனது பெயரிலும் மற்றும் எனது அம்மா பெயரிலும் தயார் செய்யப்பட்ட பாக விடுதலை பத்திரத்தில் விஸ்தீரணம் தவறாக குறிப்பிடப்பட்டிருந்ததாலும் ஆவணங்களை என்னிடம் தந்து அதனை சரிசெய்துவிட்டு 12.08.2020ம் தேதி கொண்டு வருமாறும், அன்றைய தினம் வரும்போது தனக்கு ரூ.1,50,000/- தர வேண்டும் என்று சொன்னார் நானும் பதில் ஏதும் சொல்லாமல் வந்துவிட்டேன். நான் ஆவணங்களை திரு.வைரமுத்து அவர்களிடம் கொடுத்து குறைகளை சரிசெய்து கொடுக்க சொன்னேன். அதன்படி அவரும் பாக விடுதலை பத்தரத்தில் உள்ள குறைபாடுகளை சரிசெய்து 12.08.2020ம் தேதி என்னிடம் கொடுத்து மாலை 15.00 முதல் 16.00 மணிக்குள் பதிவு செய்ய டோக்கன் போடப்பட்டுள்ளது என்றும் சொன்னார். நாங்களும் கடையநல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று பத்திரங்களை கொடுத்தோம். அப்போது சார்பதிவாளர் திருமதி.கஸ்தூரி அவர்கள் பணம் ரூ.1,50,000/- கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் பத்திரம்

பதிவதற்கே நிறைய செலவாகிவிட்டது. தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் பத்திரத்தை பெண்டிங் பத்திரமாக பதிவு செய்து தருகிறேன். பணத்தை கொடுத்த பின்பு ரிட்டண் தருகிறேன் என்று சொன்னார். நான் அவ்வளவு பணம் என்னால் தர இயலாது, கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் ரூ.1,00,000/-ஆவது தந்தால்தான் பத்திரம் ரிட்டண் தருவேன் இல்லையென்றால் ஏதாவது ஒரு காரணம் சொல்லி pending வைத்துவிடுவேன் என்றும், ரூ.1,00,000/- உடன் வரும் வெள்ளிக்கிழமை (14.08.2020)ம் தேதி மதியம் வந்து பார்க்குமாறு கண்டிப்புடன் சொல்லிவிட்டார். நானும் வேறு வழியில்லாமல் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து நான் யோசித்து பார்த்தபொழுது முத்திரைதாள் கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் அரசுக்கு செலுத்தியபின்பு சட்டப்படியாக செய்ய வேண்டிய அரசு பணிக்கு லஞ்சமாக ரூ.1,00,000/- அவருக்கு கொடுக்க விருப்பம் இல்லை. நேற்று 13.08.2020ம் தேதி நான் வேலைக்கு சென்று விட்டதால் இன்று 14.08.2020ம் தேதி புகார் மனு கொடுக்கிறேன். என்னிடம் பாக விடுதலை பத்திரம் பதிவு செய்து ரிட்டண் கொடுக்க லஞ்சம் கேட்ட கடையநல்லூர் சார் பதிவாளர் திருமதி.கஸ்தூரி மீது நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd 14/08/2020. (P.அன்னமுருகன்).

Sir, Received the complaint on 14.08.2020 at 08.00 hrs and conducted confidential enquiry. I registered a case in Tirunelveli V&AC Cr.No.04/2020 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988 (as amended in) Act 16 of 2018 on 14.08.2020 at 09.00 hrs. sd.R.KAVITHALAKSHMI, Inspector of Police, V&AC, Tirunelveli.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

14/8/2020
(R.KAVITHALAKSHMI)
Inspector, V&AC
Tirunelveli